# SUPPLEMENT TO THE BRAHMAVIDYA

# ப்ரம்மவித்தியா பத்திரிகையின்

## அநுபந்தம்.

புத் ௰௧] சிதம்பரம் ஏவிளம்பிஸு பங்குனிமீ ௩௰உக்கு 1898ஸு ஏப்ரல்மீ 11௨ [இல ௨௪


### வைதிகசந்திரமௌலி
### மகாபாசுபதாஸ்திரபராவர்த்தனப்பிரயோகம்.
முன்தொடர்ச்சி.

---

த்யானபிந்தூபநிடதம் உபக்கிரமத்தில்

(க) வாலாக்ரஶதஸாஹஸ்ரம் தஸ்ய பாகஸ்ய பா-
கிந:| தஸ்ய பாகஸ்ய பாகார்த்தம் தத்க்ஷயே து நி-
ரஞ்ஜந:||

(உ) புஷ்பமத்யே யதா கந்த: பயோமத்யே யதா
க்ருதம்| திலமத்யே யதா தைலம் பாஷாணேஷ்விவ
காஞ்சநம்||

(ங) ஏவம் ஸர்வாணி பூதாநி மணௌ ஸூத்ர இ-
வாத்மநி| ஸ்திரபுத்திரஸம்மூடோ ப்ரஹ்மவித் ப்ரஹ்மணி
ஸ்தித:||

(ச) திலாநாம் து யதா தைலம் புஷ்பே கந்த இ-
வாஶ்ரித:| புருஷஸ்ய ஶரீரே து ஸபாஹ்யாப்-
யந்தரே ஸ்தித:||

(க) ஓர் கேசத்தின் நுனியில் நூறாயிரத்தில் ஒருபாகம் எடுத்து அதன்பாகத்தையும் பாகம்செய்து, அதையும் பாகம்செய்த தன்பகுதியும் ஒழிந்தால் நிரஞ்சனமாகும்.

(உ) புட்பத்தில் வாசனையும், பாலில்நெய்யும், எள்ளில் எண்ணையும், கற்களில் தங்கமும் எப்படியோ,

(ங) அப்படியே ஆன்மாவிடத்தில் நூலில் மணிகளைப் போல பூதங்கள் உள்ளன. ஸ்திரபுத்தியாய் மயக்கமற்று ப்ரம்மத்திடம் நிட்டைகூடுவோன் ப்ரம்மவித்து.

(ச) 'திலத்தில் தைலம் எவ்வாறு' புஷ்பத்தில் நாற்றம் எவ்வாறு, (அங்ஙனம்) 'புருடன்சரீரத்தில் உள்ளும் புறமும் அவன் வியாபித்து நிற்கின்றான்' என்ற வசனங்களிருக்கின்றன. இவை ஜீவபரமென்பதிற் றடையாது?

சுவேதாசுவதர மந்திரங்களில் ஐந்தாம் அத்தியாயத்தில்:—

(க) அங்குஷ்டமாத்ரோ ரவிதுல்யரூப: ஸங்கல்பா-
ஹங்காரஸமந்விதோ ய:| புத்தேர்குணேநாத்மகு-
ணேந சைவ ஆராக்ரமாத்ரோ ஹ்யவரோऽபி த்ருஷ்ட:||

(உ) வாலாக்ரஶதபாகஸ்ய ஶததா கல்பிதஸ்ய ச|
பாகோ ஜீவ: ஸ விஜ்ஞேய: ஸ சாநந்த்யாய கல்பதே||

(ங) நைவ ஸ்த்ரீ ந புமாநேஷ ந சைவாயம் ந-
பும்ஸக:| யத்யச்சரீரமாதத்தே தேந தேந ஸ ரக்ஷ்ய-
தே||

(க) அங்குஷ்டமாத்திரன் சூரியனுக் கொப்பானரூபம் (பிரகாசமுள்ளவன்) உள்ளவன்; ஸங்கற்பம் அகங்காரங்களுடன் கூடியவன்- புத்திகுணங்களாலும் ஆத்மகுணங்களாலும் (உபாதிகளால்) அராக்கிரமாத்திரம் சிறியவனாகவும் காணப்படுவான்.

(உ) ஓர் கேசத்தின் நுனியை நூறுபங்குசெய்து மீண்டும் நூறுபங்காகப்பிரித்த சிறிய ஸம்சயமே ஜீவரூபமாகும்; அதுவே அநந்தமாம்.

(ங) 'அவன் ஆணுமல்ல, பெண்ணுமல்ல, அலியுமல்ல, எந்தச் சரீரத்தைப் பெறுவானோ அந்தந்த ரூபனாய் விவகரிக்கப்படுவோன்' என்ற வசனங்களாலும் மேலும் உள்ள வசனங்களாலும் ஜீவஸொரூபம் சொல்லுமிடம் இதேலக்ஷணம் ஜீவனுக்குச் சொல்லப்பட்டமையாலும், இங்கும் புருடன் சரீரத்தில் அவன் உள்ளும் புறமும் வியாபித்தான்' என்று சொல்லப்பட்டமையாலும் என்க. இந்த வசனமிப்படியே ப்ரம்மவித்யோபநிஷத்திலும், உண்மையில் அதற்கும் ஜீவபரத்துவம் சித்திக்குமாயினும் அதையும் முன்பின் வசனவிசார பூர்வம் ஸ்தாபிப்பாம். அவ்வுபநிடதத்தில்

ஹம்ஸவித்யாமிமாம் ஜ்ஞாத்வா குரோஶ்ஶுஶ்ரூஷயா ந-
ர:| ஸுதாநந்தநாஸாக்ஷாத்ப்ரஹ்மபாவாஸநிஶ்சயம்

'இந்த ஹம்ஸவித்தையைக் குரு சிச்ருஷையால் குருவிடமறிந்த மனிதன் ஆத்மாவை ஆத்மாவினலேயே ப்ரம்மமாகவறிந்து' என்று எடுத்துச் சில வசனங்களால் ஹம்ஸவித்தையும் வேதமும் சிறந்ததெனப் புகழ்ந்து மேலே இந்த வசனம் எடுத்துத் தொடுக்கப்பட்டது. இது ஹம்ஸவித்தையாகவே அது முற்றும் ஜீவபரமே. ஆதலாற்ருன் இவ்வுபநிடதமும் இறுதியில் 'அச்சுதோஷம்' எனத்துவக்கி சுவாநுபூதியில் சர்வசொருபத்துவம் சாற்றியது. அதுகொண்டே சுவேதாசுவதர வுபநிடதமும்

'நவத்வாரே புரே தேஹீ ஹம்ஸோ லேலாயதே பஹி:'

'நவத்துவார பட்டணத்தில் தேகியான ஹம்சன் வெளியும் விளையாடுகிறான்' என்றது. ஆகவே சேதனவ்யாப்தியைக் குறிக்கவந்த, திலேஷுதைலத்தை நம்பி இவர் அத்வைத ஜயார்த்தமான அஸ்திரம்தீட்டியது வியர்த்தமாயதறிக. மேலும் இந்த ஓரேதிருஷ்டாந்தம் சொல்லப்பட்டு அதுமட்டோடொழிந்தால் இவருக்கொருவாறு சொற்ப சகாயம் கிடைத்தாலும் கிடைக்கும். அதை சுவேதாசுவதாம் ப்ரம்மமே பத்தாவஸ்தையைப் பெற்றதுபோல ஜீவனென வழங்கப்படுகிறதென்றதே; அதற்கிவர் என்னசெய்வார். 'ஸம்ஸாரஹேது:' என்றவசனம்காட்டினேம்.

யதூர்ணநாப இவ தந்துபி: ப்ரதாநஜை: ஸ்வபாவத:। தேவ ஏக: ஸ்வமாவ்ருணோதி ஸ நோ ததாது ப்ரஹ்மாவ்யயம்॥

'எவன் சிலந்திப்பூச்சி தன்னியலால் தோன்றிய நூல்களால் தன்னையே கட்டிக்கொள்ளுகிறதோ. அங்ஙனமே ஏகனான தேவனும் ஆதரித்துக்கொள்ளுகிறான். அவனே எமக்கு அவ்யப்பிரம்மத்தை காட்டட்டும்' என்றது. இதற்குக்கதி என்ன? நிற்க. திலேஷுதைலத்துக்கு இவர் கூறிய பொருள்தான் வாஸ்தவமோவெனில் அதுவும் பொருத்தமற்றதே. எங்ஙனமெனில் 'திலேஷுதைலம் என்றும் ததினிஸர்ப்பி' என்றும் ஏழாம்வேற்றுமையாய் இருக்கும் சொற்களுக்கெல்லாம் ஐந்தாம்வேற்றுமைப் பொருளாகிய நீக்கப்பொருள்கூறி இவர் அந்தோ! தமக்கு வடமொழியில் வேற்றுமை (விபக்தி) யறிவுகூடவில்லை எனக் காட்டிக்கொண்டார். மேலும் ஏழாம்வேற்றுமையை ஐந்தாம்வேற்றுமை யாக்கிப் பொருள்கொள்ளவே, சிவ சிவ! வாணியன் தொழில்முதலறவேண்டியதாய்அதற்கேற்றவாறுவருவிக்கப்பட்டு எண்ணெயந்திரம் மத்துக்கட்டை மண்வெட்டி கடையும் கயிராதிகருவிகள் பூட்டி வேலைசெய்ய நேர்ந்தது. உண்மையில் எள்ளுக்குள் எண்ணெ எவ்வாறே? தயிரில் நெய் எவ்வாறே? பிரவாகத்தில் நீர் எவ்வாறே? அரணியில் அக்னி எவ்வாறே? அங்ஙனம் ஆத்மா ஆத்மாவிடத்தே கிரகிக்கப்படுவான். 'எவன்காண்பான் அவன் தபத்தாலும் ஸத்யத்தாலும் காண்பான்' என்பதே பொருள். இதனால் அறியப்படுவது யாதெனில், பரமாத்மதெரிசனம் செய்ய விரும்புபவன் உலகப்பொருள்கள் எங்கும் அவன் வியாப்தியைப் பாவிக்கலாம். ஆனல் அத்யந்த பிரம்மவிலக்ஷணமாய் அமிருத ஜடத்துக்காத்துமகமான பிரபஞ்சத்தில் எப்படி சச்சிதானந்த வடிவமான ப்ரம்மம் இருக்கும் என வாசங்கை நிகழ, திருஷ்டாந்தங்கள் திலேஷுதைலம், தைலம் நிகழ்சி, பிசுக்கு முதலிய குணமுள்ளது. அதற்கு நேர் விரோதமாய் அதன் பிசுக்கைத்தலைக்கும் பிண்ணாக்குடன் கலந்து தன்வடிவம் மறைந்து சக்கையென்னும் திப்பிவடிவமாய் கடினமாய் காணப்படுகிறதெப்படி, அப்படி என்றது. இதனால் வேருகத் தைலத்தைக் காணவிரும்பின் தவம் முதலிய பிரயாஸை வேண்டும் என்று ஒருவகை யதிகாரியைநோக்கி விலக்ஷணவஸ்துக்களில் ஒன்றுடன் ஒன்றுசேர்ந்திருந்த வஸ்தையில் அதன் காமரூபங்கள் வேறுபட்டும் பெயரால்மட்டில் (தைலம் என்ற பெயரால்) திலத்தில் உண்டாயது என்பதும் திலத்தின் நாற்றமும் அனுவர்த்திப்பதுபோல சமப்பிரதான பதார்த்தங்களிரண்டையும் சத்யமாகக்கொண்டு அதில் தைலம்போன்ற ஆன்மாவை யறியும் மந்தாதிகாரிக்குப் பூர்வவாசனையும் நாமசம்பந்தமும் வரும் என்றும் பால் அவஸ்தையில் நெய்யும் தயிரும் ஒன்றுபட்டுள்ள நேர்மைபோல ஜீவசைதன்யமும்ஸஜாதிவிலக்ஷணப்ரம்மசைதன்யமும் ஒன்றுபட்டிருப்பது. அவ்விரண்டும், நிகழும் திரவஜாதியாயும் ஒன்று தேஜஸ்ஸு எனப்படும். பிரகாசத்தனுகூல சாதி மதுரசாதி வெண்மை முதலிய எந்த ரூபத்திற்கும் இடங்கொடாது. ஜாதிமோரைத் தயிரைக்காட்டிலும் நீண்டகாலம் ஏகரூபமாய் உள்ளஜாதி கனீபாவம் த்ரவீபாவம் இரண்டும் சமயம்போல் உபாதிவசத்தால் அடையும் ஜாதி தன்சம்பந்தத்தால் தானன்றித் தனி மோர்மாத்திரையான பாலைக் கனப்படுத்தும்ஜாதி. தனக்குத் திரவம் என்ற ஒரு வழியில் ஸஜாதியாயும் பிரகாசமாய தேயுவுக்கு விபரீத நீர்ஜாதி புளிப்புள்ளஜாதி. நாள்பட துர்க்கந்தம் கமழும்ஜாதி. சீக்கிரம் கெட்டுப்போகும் ஜாதி. தன்சம்பந்தத்தால் நெய்யைப் பாலில் குறைத்திடும்ஜாதி. இவ்விரண்டையும் வேறுபடுத்தி யறிவது உரைகுத்தி மேலாடை எடுப்பதுபோல உலகம் அவ்வாறே இருக்கவும், நெய்யாகிய ப்ரம்மபாவனை மேலீட்டினல் ஹேயமாம் என்பதும் பிரவாகம் நுரை முதலியவிபரீதங்களுடனும் அனேக ஜந்துக்களுடனும் கூடவிருப்பினும் அந்த ஜலமென்றே கொண்டு ஸ்நானபானதிகள் செய்வதுபோல பிரகிருதத்திலும் ப்ரம்மமயமான பிரபஞ்சத்தில் மாயாமய விபரீதப் பிரதிபாஸங்களிருப்பினும் அவற்றை ஒழித்துண்மையைக்கொள்வ துசிதம் என்றும் அரணியிடம் அவ்வரணி சாதியை தக்தம்செய்து சத்த தேஜோமயமாய் விளங்கக்கூடிய விஜாதியான தேயு அடக்கிநிற்பதுபோல உலகத்தை எல்லாம் ஒழித்து கேவல சைதன்ய சேஷமாக்கும் ப்ரம்மம் கட்டைபோன்ற உலகத்தில் தான் இருக்கும். அதையே யாதாரமாய்க்கொண்டே.

வெளியாகும். அப்புறம் 'நிஷ்பிரபஞ்சானந்தத்தைக் கொடுக்கும்' என்று குறித்தற்கே அரணியக்னி திருஷ்டாந்தமுமாம். எல்லாவற்றிலும் ஸத்யம் தலம் இரண்டும் வேண்டும் என்றதால் அஸத்யமும் அதபஸ்ஸும் கூடாதெனவாயிற்று.

ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம

'ஸத்யம் ஞானமனந்தம்' ப்ரம்மம் என்றதனுல் ப்ரம்மமாயஸத்யத்தையும் தபிதவ: என்று வேதமே தவமெனக் குறிக்கப்பட்டமையால் வேதத்தையும் கொண்டேயறிய வேண்டுமென்றதும் புலப்பட்டது. இங்ஙனம் உள்ள நற்பொருளை மறைத்து ஈசனுக்கு ஏதோ இவர் வியாப்தியை ஸ்தாபிப்பவராய் எழுந்து, ஈசன் சித்கனத்திருமேனியை யணுவணுவாய்த் துளைத்து அதில் அனேக ஜடஜீவர்களைப் புகுத்தி, சிவசிவ! சிவனைச் சின்னபின்னமாக்கிச் சித்திரவதைசெய்து, கேவல ஜடவஸ்துக்களிலும் ஹேயவஸ்துக்களிலும் ஈசனைச்சேர்த்தமிழ்த்தி விபரீதசித்தாந்தம் காட்டியதற்கு ஸர்வேசுவரன் எந்த நரகம் கற்பிப்பாரோ? ரௌரவ சரணரான இவற்கு மகாரௌரவமே தகுமாக்கும். இவரது ரௌரவப் பிரம்மவித்தையில் இரண்டாஞ்சூத்திரம் ஈசனுக்கு ஔபசிலேடிக வியாப்தி கூறுவதாய் கொண்டல்லவோ இவர் அதை நிர்வகிக்க இவ்வளவு கஷ்டப்படுகிருர். அந்த ரௌரவஞானம் கேவலநிமித்த வாதத்தைக் கொண்டதாகவே, இவர் சுவீகாரபாஷ்யகாரர் அந்த வவைதிக கேவலநிமித்தவாதத்தை யொப்பாது ஒதுக்கினுராகவே, இவருக்கு இந்த ரௌரவவித்தை தமக்குப் பரிந்துபேசுங்கால் குருத்துரோக பாவவேதுவாய் ரௌரவத்தையே யளித்திடும். தலைக. சிவத்துரோக குருத்துரோகங்கள் செய்தாவது ரௌரவத்தைத் தழுவவேண்டிய வவசியமாம்போலும். நிற்க. இவர் சிவபுராணங்களில் இதற்குபிருங்கணம் எடுத்துக்காட்டினரே. அவை யெல்லாம் சென்னையாரியனுராலும் மற்றைய வேதாந்திகளாலும் மறுக்கப்பட்டனவா? ஓர் அதிகாரவேற்றுமைநோக்கியே வந்தனவென்றுதானே அவர்சொல்வது; வேதங்களில் கர்மகாண்டங்கள் போல வேதாந்தங்களிலும் மந்த மத்தியமாதிகாரிவிரக்தனுக்காகச்சில வசனங்களுள. ஆதலாற்றுன் அனேக உபநிடதங்களில் சொரூபவியாப்தியே சொல்லப்பட்டது. அவைகளில் சில காட்டுவோம்.

ஈசாவாஸ்யத்தில்

யஸ்மிந்ஸர்வாணிபூதாந்யாத்மைவாபூத்விஜாநத:|
தத்ர கோமோஹ: க: ஶோக ஏகத்வமநுபஶ்யத:||

"எங்கு எல்லாப்பூதங்களும் ஆன்மாவாகவே ஆயதோ, அங்கு ஒன்றையேபார்க்கும். (உத்தமனுக்கு) இயல்பினனுக்கு, மோகம் (மயக்கம்) ஏது? சோகம் (துயரம்) ஏது?" என்று ஏகாத்தும வாதமும் உண்மையில் எல்லாப்பூத பௌதிகப் பிரபஞ்சங்களிலும் ஸ்வரூபவியாத்தியும் சொல்லப்பட்டது.

முண்டகோபநிடதத்தில்

யதா ஸுதீப்தாத்பாவகாத்விஸ்புலிங்கா: ஸஹஸ்ரஶ: ப்ரபவந்தே ஸரூபா: | ததாக்ஷராத்விவிதா: ஸோம்ய பாவா: ப்ரஜாயந்தே தத்ர சைவாபியந்தி ||

"எங்ஙனம் பிரகாசித்தும் அக்கினியினிடம் அனேகப் பொறிகள் உண்டாகி வெளிப்படுகின்றனவோ, அங்ஙனம் அவ்வக்ஷரத்தில் ஓ ஸௌம்ய! அனேகப்பொருள்கள் உண்டாகி மீண்டும் ஒடுங்குகின்றன" என்று ஸொரூபவியாப்தியே குறிக்கப்பட்டது.

மாண்டூக்கியத்தில்

ஏஷ ஸர்வேஶ்வர ஏஷ ஸர்வஜ்ஞ ஏஷோऽந்தர்யாம்யேஷ யோநி: ஸர்வஸ்ய ப்ரபவாப்யயௌ ஹி பூதாநாம் ||

இவன் ஸர்வேசுவரன். இவன் ஸர்வஞ்ஞன். இவன் அந்தர்யாமி. இவன் எல்லாவற்றிற்கும் காரணம். எல்லாப்பூதங்களும் உற்பத்தியாய் ஒடுங்குவது இவனிடத்தே" என்று அவஸ்தாத்ரய சாக்ஷியான ஜீவனிடமே அவ்வவஸ்தைகள் கடந்தவிடம் ஸ்வரூபவியாப்தியே குறிக்கப்பட்டது.

அதேயுபநிடதம் அதே ஆத்மாவை இறுதியில்

ப்ரபஞ்சோபஶமம் ஶாந்தம் ஶிவமத்வைதம்|

"ப்ரபஞ்சம் ஒடுங்குமிடம் சாந்தன், சிவன், அத்துவிதன் என்று ஸ்பஷ்டமாகச் சொரூபவியாப்தி சொல்லியது."

தைத்தரீயம்

ஸத்யம் சாந்ருதம் ச ஸத்யமபவத் யதிதம் கிம் ச|

"மெய்யும் பொய்யும் மெய்யேயாயது. இங்குள்ளதெல்லாம்" என்று சொரூபவியாப்தியை வற்புறுத்தியது. சாந்தோக்யத்தில் ஆராமத்தியாயத்தில் மட்குட திருஷ்டாந்தத்தாலும் லோகமணி திருஷ்டாந்தத்தாலும் சொரூப வியாப்தியே உபதேசிக்கப்பட்டது. மேலும் "ஆன்மா ஒன்றே சத்யம்" என்றும் அஃதின்றி மற்றது பொய்யென்றும் உள்ள பல வுபநிடதங்ளில் உள்ள வசனங்களை இந்நூலின் உபசங்காரத்தில் விரித்துரைப்பாம். ஆகவே இவ்விடம் எடுத்துக்காட்டிய பாஹ்யாப்பியந்தர வியாப்தியே உண்மையெனக்கொண்டு விபரீதப் பொருட்படுத்தி சொரூபவியாப்தி சொன்னவசனங்களைப் பாழாக்காது சர்வப்பிரபஞ்சாபின்ன நிமித்தோபாதானமாகிய பிரமத்தைச் சிலவிடம் கேவலநிமித்தம்போலவும் சில

விடம் கேவலவுபாதானம்போலவும் திருஷ்டாந்தபூர்வம் காட்டி இரண்டையும் சிலவிடம் ஒருங்குசேர்ப்பது வேதாந்தங்களின் இயலாதலால், அம்மந்திரங்கள் அவ்விதம் கூறின. மேலும் புராணங்கள் வேதங்களுக் குபபிருங்கணங்களாகவே, அவ்விதமவை கூறினமையும் குற்றமல்ல. சொரூப வியாப்தியைக் குறித்த வசனங்களுக்கும் புராணவசனங்களுக்கும் பல வுபபிருங்கணங்களுள. அவைகள் முன்னர் ஸ்ரீகண்டபாஷ்ய விசாரப் பிரகரணத்தே எடுத்துக்காட்டப்பட்டன. மீண்டும் சில வுபசங்காரத்திலும் காட்டப்படும். நிற்க; இவ்விதம் இவர் சுவீகாரபாஷ்யகாரரும் பாசுபதாதிகரணத்தில் அவைதிகமாதம் என்று ஒதுக்கியதும் ஸ்ரீமதப்பயதீக்ஷிதஸ்வாமிகளால் ஸ்ரீ சிவதத்துவ விவேகத்தில் மறுக்கப்பட்டதுமான கேவலநிமித்தவாதத்தையே புகழ்ந்து உபாதானவாதத்தை யிகழ்ந்திடும் அவைதிக சிவாகமங்களில் அதிக ஆக்ரகங்கொண்டு ஏதோ வேதங்களில் மேற்காட்டிய பாஷ்யகாரராதியோர் ஏகதேசமதமாகக்கொண்ட சாமான்யவசனங்களைத் திரட்டி அவற்றிற்கு அநேக அத்தியாஹாரங்களுடன் பொருளுரைத்து ஆகமபக்ஷம்போற்காட்டிப் பகட்டி மருட்டுவதால், அத்துவிதிகளான விவாதரூர் இதில் சிறிதும் அஞ்சார். மேற்கண்ட திருட்டாந்தங்கள் ஒருவகைப்பட்ட வதிகாரியை நோக்கி வெளிவராது. பலவித வதிகாரிகளைநோக்கி வெளிவந்தனவென்றே கொள்ளவேண்டுவனவாதலால் அவைகளை ஒருபாற்படுத்த பிரவாகத்தில் 'நீர்' என்ற திருட்டாந்தத்தில் [வறந்த]என்ற ஒருசொல்லைக் கண்டவிடமெல்லாம் புகுத்திப் புகுத்தி இவர் கஷ்டப்படுவது நிஷ்பிரயோஜனம் என்பது மேற்காட்டிய நியாயங்களால் பெறப்பட்டதும், இவரும் இவ்விஷயவுபசங்காரத்தில் "இந்தனத்தினெரி, பாலில் நெய், பழத்தினிரதம், எள்ளின்கண்ணெய்" என்பன வுலகத்தார். "மந்ததரமலபாகவுடையார், மந்தமலபாகமுடையார், தீவ்ரமலபாகமுடையார் என்போர்க்கு இன்னது இன்னது பாற்பட உபமானங்களாய் ஏகதேசம்பட நின்றன" என்றார். ஆகவே யாம் "தீவ்ரதர மலபாகமுடையார்க்கு "பிரவாஹங்களில் நீர்போல" எனப் பூர்ணோபமானம் கூறினர் என்றோம். ஆயின் எமக்கும் சொல் வருவிக்கும் பெரும் வருத்தம் இல்லை. உள்ளதை உள்ளபடி பொருட்படுத்தக்கூடாத விடமே சொல் வருவிக்கவேண்டுமேயன்றி எங்கும் தமக்குத் தோன்றியவாறு பொருட்படுத்தச் சொல் வருவித்தல் பெருங்குற்றம் என்பதைச் சாஸ்திராப்பியாஸிகளிடம் கேட்டறிவாராக, பிறகு இவர் செய்யும் உபசங்காரத்தைப் பார்ப்பாம். "ஆகவே வைதிக பாசுபத யோக சுவேதாசுவதரோபநிடத முதலியவைகளுக்கும் புராணங்களுக்கும் ஆகமங்களுக்கும் திராவிட வேதங்களுக்கும் திராவிட சித்தாந்த சாஸ்திரங்களுக்கும் "எள்ளில்நெய் முதலியவாக மேலே காட்டப்பட்ட உபமானங்களெல்லாம், சிவபெருமானும் பரமபதியாவார், பசு பாசம் என்னும் ஸமஸ்த சேதனாசேதனப் பிரபஞ்சங்கடோறும் உள்ளும் புறமும் வியாபித்து நிற்கின்றார் என்றமையையும் ஏகதேச வுபமானங்களாய்ச் சேருமென்பது ஒத்த கருத்தாய்க் கொள்ளற்பாலதாம்" என்பது. இதைச் சற்று கவனிக்கவேண்டும். இங்கு உதகரித்த உபமானங்களில் உபசங்காரத்தில் அவரே தமக் கொத்துவாராததெனக் கருதியே போலும் பிரவாஹநீர் உபமானத்தை விட்டொழித்தார். மேலும், எள்ளில் எண்ணெ: மேற்றோலில் இல்லை; தோலை மட்டில் எடுத்து எவ்வளவு யந்திரப்பிரயோகம் செய்தாலும் அதில் எண்ணெய் கிடையாது. ஆகவே, அது உள்வியாப்திக்கே உதாரணம்: "தயிர் நெய்" இது தயிரான காலத்தில் நெய் மேல் ஆடையாய்ப் பிரிந்து நிற்றலால், அது ஒருவாறு பகிர்வியாப்தியையே குறிக்கும். "பிரவாகநீர்" இதுட்ளும் புறமும் வியாப்திக்கு [சொரூப வியாப்திக்குப்] பூர்ண திருட்டாந்தம் "அரணியில் அக்கினி." இதுவும், அக்னி ஏகதேசமே அக்கினி கடையக்காணப்படுதலால் அம்பிவ்யக்தாந்தர்வியாப்தியையே காட்டுவதாம். "புஷ்பகந்தம்" இது மேனோக்காய் பகிர்வ்யாப்தி. "பலாசம்" இதுவும் சில பலங்களில்மேற்றோலிலும்சிலவற்றில்உள்விதைகளிலும் சிலவற்றில் இரண்டிலும் ரசம் அடைபடாமையால் ஏகதேச வியாப்தியே காட்டும். 'பாலில் நெய்' வியாப்ய வியாபகாகாரமாய் வியத்யஸ்த திருஷ்டாந்தம். அதாவது ஒருசேர் பாலைக்காய்ச்சி உரைகுத்தி, மோர் கால்சேர் சேர்த்து, ஒன்றேகால்சேர் பொருளை வைத்து மத்திட்டுக் கடைந்தால் மோர் ஒன்றே அரைக்கால் சேரும், அரைக்கால் சேர் நெய்யும் அகப்படும். ஆகவே, பாலில் நெய் என்றால் ஒருசேர்பாலில் அரைக்கால்சேர் நெய்வியாப்பியம் வியாபகம்போல் தோன்றியதென வியத்யஸ்தம். ஆகவே தீவிர மலபாகமுடையார் என விவர்குறிக்கும் உத்தமருக்கு பிரவாஹநீர் திருஷ்டாந்தமே முக்கியமென்றது எம்மால் எடுக்கப்பட்டது. அஃதொழிய விவர் எடுத்தவையெல்லாம் உள்ளும் புறம்பும் வியாப்திக் கேகதேசத் திருட்டாந்தமேயாம் என்க. ஆகவே இவர்கொண்ட முடிவின்படி எவ்வழியும் ஏகதேசமாக முடியும் திருஷ்டாந்தங்களைக் கொண்டு பூர்ண திருஷ்டமாகக்கூடிய அக்னிப்பொறி, பிரவாகநீர் முதலிய திருஷ்டாந்தங்களை மறைப்பது கூடாதுபற்றி மேற்கண்ட வேதபுராணங்களில் தாத்பர்ய கேவலாத்துவிதமேயன்றி வேறில்லை. இவரால் திராவிடவேதங்கள் என்று நிரூபிக்கப்பட்ட திவ்ய சூக்திகளும் கேவலைகாத்மவாதமே என்பதையும் உபசங்காரத்தில் காட்டுவோம். ஆகவே காமிகாதிகளும், சில தமிழ்நூல்களும் மேற்கண்ட வேதாந்தபுராணாதிகளுக்கு முரணுமாயின் அது அவைதிகநூல்களின் இயலேயென வறிஞர் அறிந்து ஒதுக்கவேண்டும். நிற்க; உண்மை இங்ஙனமிருக்க ஏதோ தாம் செய்ததும் நியாயமென்றும் சென்னை ஆரியனார்செய்தது குற்றமென்றும் துராக்ரம்கொண்டு முடிவில் அவர்மேல் விடுக்கும் பழிச்சொற்களைப்பற்றிச் சிறிது பரிசீலித்து யாம் இந்நூலின் முடிவுரை கூறிடுவோம். இவர் எடுத்துவிடுக்கும் முடிவுரை வருமாறு:—

இஃதின்னமாக ஓர் சைவர், வேதாந்தி, அத்துவித சித்தாந்தி ஆகிய மும்மூர்த்திகளும் தாமியற்றிய வேதாந்தசங்கை நிவாரணத்திலே 'நீலோற்பலம்போற் கண்ணெனில், நீலநிறம்வரையில் உபமானமேயன்றி மற்றப்படியன்றே. நீலோற்பலத்திற்கு வாசனையும் காம்பு மிருக்கின்றனவே, அவை கண்ணுக்கிருக்கின்றனவா' என்றும், நீலோற்பலம் தரிக்கப்படுகின்றதே கண், அவ்வாறு தரிக்கப்படுகின்றதா வென்றும் கேட்பது சற்றூர்க் கழகன்றும் என்றும் கூறுவாராக. மும்மூர்த்தியார் இனத்தாரும் சென்னை ஆரியனாரும், '[illegible]பகச் சச்சிதானந்தமுடையது' என்னும் பிரதியில் உபமானம் ஏகதேசமென்பது யாவரும் உணர்ந்தவிஷயமே என்றும், ஆனால் அந்த ஏகதேசவுபமானமே உபமேயத்திற்குப் பொருத்தமில்லாவிடில் ஒப்புக்கொள்ளப்படுமோ? மேகம்போற் கூந்தல்யென்றால், இதில் கருமைநிறம் உபமானம்; மற்றைப்படி மேகத்திலுள்ள நீர், இடி மின்னல், ஆகாயத்தில் நடத்தல் முதலியன உபமானமாகாவென்றும், மேகத்தில் அனேக குணங்களிருந்தாலும் எடுக்கப்பட்ட உபமானம் கருமைநிற மொன்றேயாம் என்றும், அவ்வொன்றைமாத்திரம் எடுத்து ஏகதேச வுபமானம் சொல்லப்படுகிறதென்றும், அவ்வேகதேச வுபமானமும் இல்லாவிடில் அது உபமானமாகுமாவென்றும், கூந்தலின்கருமைக்குபமானம் கூற எழுந்து அதற்குப் பலத்தை உபமானமாகக்கூறிடில்அது பொருந்தமாவென்றும், 'இயம்புமுவமானமெலா மேகதேசமென நினைவாய்' என்று ஞானவாசிட்டத்திலும் சொல்லப்பட்டிருக்கிறதென்றும், அலங்காரசாஸ்திரத்தைக் கண்டாற்போல அலங்காரமே போதிக்கும் அலங்காரசாஸ்திரத்தில் அலங்காரம் படித்தறியாது வேறு மாயாவாதம் போதிக்கும் வேதாந்தநூல்களிலே எங்காயினும் அங்கங்கே வந்து நேரிடும் ஒவ்வோர் உபமானத்தைப் படித்து வாய்க்கேழ்வியினாற் பழகிவந்தவராய் மேலே சொல்லப்பட்ட வைதிக பாசுபதோபநிடதங்களும் புராணங்களும் சிவாகமங்களும் மற்றையோரும் ஒரு நெறிப்படச் சொல்லிய வுபமான உபமேயங்களுக்கு ஏகான்மவாத மாயாவாதந்தான் முற்றியநிலை என்று ஆசாரியர் தமெறிப் போய் விபரீதமுற்றுணர்ந்து பாசுபதோபநிடத நெறியாற் பொருள்படுத்தப் பாலனவற்றை மாயாவாதோபநிடதங்களுக் கிசையப் பொருள்படுத்தவேண்டித் தமது மாயாவாதோபநிடதங்களிற் காணப்படாதனவாய் வைதிக பாசுபதாத்தியாசிரம பாசுபதோபநிடதங்களிற் காணப்படுவனவாயுள்ள 'எள்ளினெய்' 'தயிரினெய்' 'பாலினெய்' 'பூவில் வாசனை' 'பழத்திற்சுவை' 'மணியிலோசை' இந்தனத்தில் (கட்டையில்) அக்னி முதலிய உவமைகளையெல்லாம் தமது 'பதிபசுபாசவாதம்' என்னுந் தச்சநூலிலே அலைத்துத் தார்த்தஞ் செய்த பல வாக்கியங்களுள்ளே சிலவற்றை எடுத்து விளக்குவதே சுருதியாதிகளுக்கு மாறுபடப் போந்ததைப்பற்றி அவர்க்குக் கண்டனமாய் முடிந்து, அவரை விவேகிகள் யாவரும் வேதபாஹ்யரென்று எண்ணி ஒதுக்குதற்குக் காரணமாய் முடியுமென்க. சுருதிகளிலே கண்ணுக்கொளி உண்டென்று சொல்லப்படவும், இவர் இனத்தாராம் மதாசாரியராகிய சங்கராசாரியர் சுருதிபாஷ்யத்திலே '[illegible]:' 'ஒளியுடையதோ கண்' என்றும் கூறியிருப்பவும் சுருதிகளையும் நமது ஆசாரியர் சங்கராசாரியரையும் பொருட்படுத்தாது ஐரோப்பிய சாஸ்திரங்களையும் ஐரோப்பியரையுமே முறையே உத்கிருஷ்ட சுருதிகளாயும் உத்கிருஷ்டாசாரியர்களாயும் கொண்டு பொருட்படுத்தும் அநாரியராகிய சென்னை ஆரியனார் பின் என்னசெய்யார். இவர் எண்ணைத்திப்பியும் நெய்யுமாகப் பிரித்தும் நெய்யுந் திப்பியுமன்றி எள் என்னும் சொற்குப் பொருளில்லாதவாறுபோலப் பசுவும் பாசமுமன்று, பதி என்னும் சொற்குப் பொருளில்லையென்றும், அதனாற் பதியில்லையாய்ச் சைவசித்தாந்தசமயம் நாஸ்திகமதமென்று பதி, பசு, பாசங்கள், மூன்றும் அபரிபூர்ணகண்ட. அவ்வியாபகப் பொருள்கள் என்றும் பின்னர் பழத்தினின்றும் சுவையை வேறுபிரிக்கலாகா தென்றும், பழமுங்குணியும், சுவை அதன் குணமுமாமாறுபோல பசுபாசங்களை விட்டுப் பதியை வேறுபிரிக்கலாகாதென்றும் பதிகுணியும் பசுபாசங்கள் அதன் குணமுமாமென்றும் பதியும் பசுவும் பாசமும் அசத்தாமென்றும், பின்னர் பூவிலுள்ள வாசனைப் போகப்போக பூவை விட்டு வெளிவருகிறதென்றும், பூவுக்குப் பின்னமாகிய வாசனையில் பூவியாபித்ததென்றும் கூறுதல் கூடாவாறுபோல பதியானது பசுபாசங்களில் வியாபிக்குமென்று சொல்ல இயையாதென்றும், அதனால் பூவில் வாசனை வியாபித்ததென்றும், உபமானப் பொருத்த முடையதன்றென்றும், பின்னர் மணியானது ஓசைக்குத் துணைக்காவியாயிருக்கிறதென்றும், அத்துணையும் காற்றில்லாவிடத்துப் பயன்படுவதில்லை என்றும், வாயுச்சாம்பியால் காற்றை இழுத்துவிட்டால் மணியை எவ்வளவு ஆட்டினாலும் ஓசையுண்டாவதில்லை என்றும்; மணிக்கு வெளியில் ஓசையிருப்பதுபோல பதிக்கு வெளியில் பசுபாசங்களிருக்கிறதென்றும், பதி அபரிபூரண தோஷமுடையதென்றும், பின்னர்க் கட்டையில் நெருப்பு வியாபித்ததின் உபமானம் பொருந்தாதென்று எடுத்துக்கொண்டு ஆகாயத்திலிருந்து வாயுவும், வாயுவிலிருந்து தேயுவும், தேயுவிலிருந்து அப்புவும், அப்புவிலிருந்து பிருதிவியும் உண்டாகிறதென்றும், அந்நெறியானே நெருப்புக் காரணமும் விறகு காரியமுமாகின்றவாறுபோல, பதி காரணங்கள் பசு பாசங்கள் காரியமுமாகின்றன என்றும், கட்டையிலுள்ள பிருதிவியணுவும் நெருப்பணுவும் வேறுவேறு கண்டத்தன்மை யடைகின்றவாறுபோல பதியும் பசுபாசங்களும் வேறாய்ப் பதி அபரிபூரணப் பொருளாகின்றதென்றும், பின்னர்ப் பாலைக்காய்ச்சிக் கடைந்தபோது மோரும் வெண்ணையும் பிரிகின்றனவென்றும், மோர் இருக்குமிடத்தவிர மற்றவிடத்தில் நெய் வியாபகமென்றும். பாசமும் நெய்யும் வேறுவேறிடத்தில் கண்டப்பொருளாயிருக்கிறவாறுபோல பதியும் பசுபாசங்க

ளும் அடரிபூரணப்பொருளென்றும், அநலுல் பால் செய் [தயிர் செய்] திருட்டாந்த முதவாதென்றும், அநேகபக்கங்கடோறும் வேதபுராணாகமோக்த உபமான உபமேயங்களை எல்லாம் ஓர்விதிக்குமடங்காது மனம்போனவாறு குலைத்துக்குலைத்து அலைவுசெய்தார். வேதபுராணாதிகளிலே உதாரிக்கப்பட்ட எள்ளினெய் முதலிய உபமானங்கள் கம்மாற் புதிதாக எடுக்காளப்பட்டனவன்றேயாக, சென்னை ஆரியனுர்க்கு அவ்வுபமானங்கள் பொருந்தாது போந்ததென்னையோ? இவரிடத்திலே நம்மிடத்திலாத சுருதியும் புராணங்களு முணடோ? கூந்தலுக்குபமானமாக பனைத்தைக் கூறுவதுபோல, பதியையும் சேதனுசேதனப் பிரபஞ்சமாகிய பதிபாசத்தையு முற்றும் சுருதி புராணாதிகள் காட்டிய அவ்வெள்ளினெய்யாதி யுபமானங்கள் இவர் குருட்டுக்கண்ணுக்கு ஒவ்வாமற்போயினமைக்கு காரணமென்னையோ? தம்மேற் பிழைபிடிக்குமாறு எதிர்புறத்தார் சொலுங்கால் உபமானங்களெல்லாம் ஏகதேசம் ஏகதேசமென்று கூச்சல்போடுகின்றவர் எதிர்புறத்தாருடைய சுருதி புராணயுக்த உபமான உபமேயங்கள் இவர்கண்ணுக்கு உவமையாய்ப் போனது எந்த இலக்கண விலக்கியத்தாலோ என்பதை விளக்குவாராக. சுருதியுக்த உவமைகளைக் குரங்கின்கைப் பூமாலைபோல சின்னபின்னப்படுத்தவர். பின் எவர்காட்டும் உபமான உபமேயங்களை பிழைக்கவிடுவார்? இடையிடையே சுருதி சொல்லியவைகளுக்கு அமைபவர்போலவும் எழுதிக்கொள்ளுகின்றார். அந்த சுருதி அங்கிலேயர்கண்ணுக்கு ஒளியில்லையென்றும் காட்டும் சாஸ்திரி சுருதிகளோ, ஏகான்மவாதங்களிலே காணப்படாது பாசுபதோபநிடதங்களிலே காணபபடும் எள்ளினெய் முதலிய உபமானங்களை இப்பாசுபதோபநிடதப்படி பொருள்படுத்தாது குற்றம்பிடிக்கப் போந்தமைக்கு சென்னை ஆரியனுர் தக்கவிடை இறுப்பாராக'

என்று தோன்றியபடி எல்லாம் எழுதிவிடுத்தார். இதைக் கண்ணுற்றார் இவருக்கு அத்துவிதசித்தாந்தத்தில் உள்ள துவேஷத்தை நன்கறியாது போகார். அதுடன் ஏதேனும் ஓர் சிறிதும் நியாயசம்பந்தமன்றிப் பிறரை இகழ்ந்து தம்மினம் புகழ்ந்து அளிப்பதே கலியுகசித்தாந்திகளுக்குரிய விலக்கணம் என்பதையும் நன்கறிவார். நிற்க; சொல்வதில் ஓர் சிறுபான்மையேனும் நியாயமுண்டோவெனக் கவனிப்பாம். முதலில் தோன்றியபடியெல்லாம் பீடிகை போட்டு பிறரை திட்டித் தாமே மாயாகாரண வாதியாதலால் மாயாவாதியாயிருக்க அதைப் பிறர்மேல் ஏற்றித் தூற்றி ஸன்னிந்தாபாவப் பழிசுமந்தனாவி, ஐயோ! காசியில் வசிப்பதால் பைரவ சூலாக்கிரயாதனைக் காளாகின்றாரே எனப் பார்ப்பவர் பரிதாபப்படும் நிலைபெற்றார். அதுடன் நில்லாது தாம் புதிதாய் சொற்பனங்கண்ட வுபநிடத தார்விபாகத்தை யனுசரித்து எவரும் சொல்லவில்லை என்றும், அந்த உபநிடதங்களுள் சில வைதிகாத்யாசிரம பாசுபதோபநிடதமென்றும் அவற்றுள்ளே காணப்படும் எள்ளில் நெய் முதலிய திருஷ்டாந்தங்களே மிக மேலானவை என்றும், அவைகளைப் பொருட்படுத்தும் வழியும் இவர் கொண்டபடியே செய்யவேண்டும் அன்றி, வேறுவழி செல்வார் அறிவீனர் என்று ஆணையிடுவாராயினர். அந்தோ! இவர் அறியாமைக் கென்செய்வாம். வேதங்களையும் வேதாங்கங்களையும் பொருட்படுத்தவேண்டிய விஷயபத்தில் முக்கிய கருவிகள் ஷடி வேதாங்கங்கள் ஆறும், உபபிருங்கணங்களும், மீமாஞ்சா நியாயங்களுமேயென புராணேதிகாசங்கள் புகல்வது மன்றி, பிராசீனபாஷ்யகாரர் எல்லோரும் (இவர் சுவீகார பாஷ்யகாரர் உள்பட] ஒப்பிவருக்கவிருக்க, எவரும் எவரும் இதுகாறும்தொடாது கடந்த ஓர் நவீன அவைதிகமார்க்கத்தை இவர் கைக்கொண்டு தமோமாறிசெத்தாந்தம்பட்டப்புகுந்து பெயர்மாத்திரையிலாவது இவர் முன்னோர் உரிமைகொண்டாடின சுத்தாத்துவிதத்தையும் விட்டன்று "தேளுக்குப் பயந்து பாபபின் வாயில் வீழ்ந்த' தேரைபோல விபரீதமாய் இவர் முன்னோர் முற்றும் தவறு எனக் கண்டித்தொதுக்கிய பிரம்மபரிணாமவாதமாகிய விசிட்டாத்துவிதப் படுகுழியில் வீழ்ந்துழன்று அதிலும் நிலைகொள்ளாது சிவ சிவ! பைத்தியம்பிடித்தவர்போல பிரமாணங்களில் சைவவிசிட்ட வாதிகளான ஸ்ரீ ஸ்ரீகண்டாதியோர் முக்யமாய்ப் பிரமாணமெனக் கொண்ட வேதாந்தங்களையும் சிதைத்துக் குலைத்துச் சின்னபின்னமாக்கி ஹர ஹர! பரமேசுவரனது சுத்தநாதமயவடிவாய் நிற்கும் வேதவித்துவம் ஸகராய் அன்று சோமகாசுரன் ஹயக்ரீவாசுரன் முதலியோர் வேதங்களைப் பெரும்பாடுபடுத்தியவர் சென்ற பாதாளநெறி சென்று விபுதஹிம்ஸை செய்து ஸ்ரீ ஸ்ரீநிவாஸனைப் பழித்து அவன் திருவவதாரத்தால் உபசங்காரம் பெற்றாற்போல இவரும் ஒருவாறு தக்க வித்துவத்சிகாமணிகள் மூலமாய் இவ்வைதிக நவீன வப்பிரமாணிக பாஷண்ட தாந்திரிக விபரீத விவாதத்திற்கு ஏற்ற பரிகாரம் பெறாது போகார். அம்மம்ம! கலியின் வலியாதென்போம். இதோ ஆரியதேசசம்பந்தம் பெறாத நாட்டில் பிறந்தும் வேதசாஸ்திர வாடையற்றவருடன் வாழ்ந்தும் ஏதோ பூர்வ புண்யபரிபாகத்தால் நல்ல வைதிகர் தேசமடைந்தும் பூர்வவாசனை விடாது மீண்டும் பேதவைதிக வேதாந்த தூஷண புண்யமார்க்கமே இவருக்கினிமையாய் இருக்கின்றது. நிற்க; இவர் ஏதோ கண்ணொளி விஷயத்தில் சென்னை ஆரியனுர் வகைக்காரர் பெரியோர் வார்த்தையை யனுசரிக்காது மேற்றிசையாரை யனுசரித்தார் எனப் பெரியதோர் குற்றத்தை யவர் தலைக்கேற்றி மகிழ்ந்தார். இவர் இந்நூல் துவக்கிய தமுதல் அடியில் இவர் கனவுகண்ட வுபநிடத தார்விபாகத்திற்கு F. A. B. A. பட்டங்களே திருஷ்டாந்தமென்று காட்டி அதின்றியமையாமையே வேதாந்திகள் எல்லோருக்கும் பெரிய குறையென்றனர். மேலும் தாம்தொடுத்த பாசுபதாஸ்திரத்திற்குதிவ்யபீஜாக்ஷரங்கள் ஆங்கிலேயமே அருகமெனக் கண்டெடுத்தவற்றை அவ்வஸ்திரத்தின்திருமுகமண்டலத்தமைத்தனர். இடையேதமது பரமாசாரிய நாவலர் பெருமைகூறி மகிழுமிடம் ஆங்கிலேயர்கொ

டுத்த யோக்யதாபத்திரிகையே பரமோத்தம ப்ரமாணமாகக் கொண்டார். சிலவிடங்களில் ப்ரக்ஷேபம் முதலிய வடசொற்களை உபயோகிக்க வியலாது (இன்டர்பொலேஷன்) முதலிய திவ்ய புண்யபதங்களை உபயோகித்தனர். இவர் தமிழின் இலக்கண விலக்கியங்களை முற்றும் கற்றவராகவே, இவருக்கு அபாண்டமில அப்பட்டச்சொற்களுக்கு ஆவலேயாஷையே அக்ஷயநிதிபோலும்! மேலும் அனேகவிடங்களில் மேற்றிசை நடையுடைகளே பிரமாணமெனக் கொண்டு நடக்குமிவர், இருகண்ணும் பிறப்பிலேயே இல்லாத ஓர் குருட்டாசன் வயதின் முதிர்ச்சியால் கண்ணாடி போட்டுக்கொண்டு நடக்கும் ஓர் விருத்தப்பிராமணனைப் பிறர்சொல்ல வறிந்து, ஓ குருட்டுப்பிராமணா! என்று விளித்த காதையை நிலைநிறுத்துவாராகின்றார். மேலும் இவர் மேற்றிசையார்ஏற்படுத்திய படிப்புச்சட்டதிட்டங்களுக்கேற்ற பட்டங்களும் அவற்றிற்கேற்ப படிக்கவேண்டிய புஸ்தகங்களின் தாரதம்யங்களும் தாம் கனவுகண்ட வுபநிடத விபரீத வைதிக துர்விபாகத்துக்கு முக்கியப்பிரமாணமெனக் கொண்டனரே. அதுவிஷயம் இவர் சுவீகாரபாஷ்யகாரருக்குத் தெரியுமா? பவதேவ மிச்சிரருக்குத்தான் புலப்பட்டதா? ஸ்ரீமத் ஹரதத்தசுவாமிகளுக்காவது தோன்றியதா? ஸ்ரீமத் அப்பயதீக்ஷிதராம் பெரியோராவது இதனுண்மையறிந்தாரா? இவர் முன்னூறுவண்டிக்கதை நாயகரேனுங் கூறினரா? இவர் சூலோதத்துங்கமுனிவரான பண்டிதர் ஞானப்பிரகாசர் சிவஞானர்களாவது வழங்கினரா? அல்லது அவர் யோக்யதாபத்திரிகையால் இவரால் பரமகுருவென மதிக்கப்பெற்ற ஸ்ரீ நாவலரேனும் எங்கேனும் இதுவும் பிரமாணமென்றாவது இதுவே பிரமாணமென்றாவது சொன்னாரா? எல்லாவற்றையும் விட்டு சென்னை யாரியனிடம் அவ்விதம் சொன்னதுமட்டில் குற்றம்; எம்மிடம் குற்றமில்லை. ஸ்ரீ லோககுருஸ்வாமிகள் இவர்கண்ட புராணப்பகுதிகளிலும் இவருக்கு ஞாபகத்திலுள்ள வசனங்களில் உள்ளவையன்றி மற்றவைகளைக்கொண்டு வேதாந்தங்களுக்குப் பொருள்செய்தது குற்றமாம். இவர்மட்டிலும் ஆங்கிலேயர் சட்டம் என்றதில் அபிமானத்தைக்கொண்டு வேதாந்தவாக்யார்த்தநிர்ணயம் செய்யலாமாம். இதென்ன விபரீதம்! மாமியார் உடைத்தால் மண்கலமாம், மாட்டுப்பெண்ணுடைத்தால் வெண்கலமாம். சிவ சிவ! கலிமகாராஜன் ஸதஸில் நடக்கும் வித்துவத்விவாத சம்பிரதாயமிதோ துலைக. மேலும் வேதாந்தங்களை யுபபிருங்கணங்களைக் கொண்டு பொருட்படுத்தவேண்டுமானால், தேஜோவிந்து முதலிய வுபநிடதங்கள் (இவரால் மாயாவதோபநிடதம், சாங்கியயோகோபநிடதம் என்று சமயத்துக்கேற்றபடி ஓதுக்கப்பட்ட வுபநிடதங்கள்) சனற்குமாரசங்கிதை முதலியவற்றால் விரித்துரைக்கப்பட்டமையின் அவைகளை எவ்விதம் அப்பிரமாணம் என்பதோ தெரியவில்லை. ஸ்ரீ ப்ரம்மவித்யா பத்திராதிபர் இயற்றிய சிவதத்துவ சுதாநிதியின் சிந்தாமணியுரையில் இவ்விஷயம் விரிந்துகிடப்பதை இவர் அறியார் போலும்! சிலகாலங்களுக்குமுன் மேற்கண்ட கலிமகாராஜன் ஸதஸ்ஸில் சைவதாந்திரிக பண்டிதபட்டத்தை இவர் பெற்றுப்போல வைஷ்ணவதாந்திரிக பண்டிதபட்டத்தைப் பெற்றுப் பாஞ்சராத்திரபக்ஷத்துக்குச் சாதகம் பேசும் இத்தென்னாட்டு பண்டிதர் ஒருவர் வேதாசிரியர் ஒப்பிய உபநிடதம் 10 மட்டே என்றும் பின்னர் 12 என்றும் வாதித்துப் பங்கமடைந்தார். மேலும் அவரும் வேதாந்தங்களில அவைதிகதாந்திரிக விஷயங்கள் உண்டென வாதித்தார். இவரும் அவரும் ஒரு ராசாங்க வித்துவானாகவே, ஒருங்குசேர்ந்து வேதாந்தங்களில தந்திர தாந்திரிக கர்மானுவாதம உண்டென்பதைமட்டில ஒப்பினர். எப்படியேனும் தாந்திரிகர் எல்லோரும் ஒருங்குசேர்ந்து வாழ்வதே நலம். ஹிரண்யகசிபு, மகாபாசுபதன, பிரஹ்லாதன், மகாவைஷ்ணவன். பலிமகா பாகவதன், பாணன் பரமபாசுபதன், என்றமைந்தாற்போல இதுவுமமைந்தது. அவர் பாகுபாட்டுக்குப் பிரமாணம் அவர் புத்தியே. இவர் பாகுபாட்டுக்குப்பிரமாணம் ராசாங்கச் சட்டம். ஆகவே, இதுவே முக்கியமாகும்போலும்! இவ்விதம் விபரீத மூலாதாரமுள்ள சித்தாந்த வறிவின்மை ஒருகுறைவென்றம், கைகூசாதெழுதுவது எவ்விதத்திய நெறிப்பட்டோரோ அவரே யறிவார்? சற்க.மேலேசென்று பார்ப்பாம். இவர் 'எள்ளிநெய்' முதலிய வுபமானங்களை எடுக்காதுபோனது ஆரியனார் குற்றமென்றார். இவர் சிலந்தி திருஷ்டாந்தம் அக்னிப்பொறி திருட்டாந்தங்களை மறந்ததேதனாலோ? மேலும் நதீசலதிருட்டாந்தத்தில் இடற்பட்டது எதற்கு? சாந்தோக்யத்தில் உபதேசிக்கப்பட்ட மண்குடமாதி திருஷ்டாந்தங்களையும், லோகமணியாதி திருஷ்டாந்தங்களையும் மறந்தனரா? மறைத்தனரா? அவைகளுக்கெல்லாம் இவர் என்னகதி சொல்வார். 'எள்ளு எண்ணெய் திருஷ்டாந்தம் மாயாவாதோபநிடதங்களில் இல்லையென்றும் வைதிக பாசுபதோபநிடதங்களில் உண்டென்றும் எழுதினரே' யாம் காட்டிய 'ப்ரவாக ஜலதிருஷ்டாந்தம், மட்குடதிருஷ்டாந்தம் அக்னிப்பொறிதிருஷ்டாந்தம், லோகமணிதிருஷ்டாந்தம், சிலந்தி திருஷ்டாந்தம் இவைகள் எந்தஉபநிடதங்களில்உள? இவற்றிற்கெலாம் கதியாதுசொல்லுவார்? மேலும்உப்புநீர்திருஷ்டாந்தம் இவருக்கும் சாதகமாக விருப்பதை எதற்கென விட்டார். பீஜாங்குர திருஷ்டாந்தமும் இவருக்குப் பாதகமோ? இவைகளை எல்லாம் பூர்வபக்ஷப்படுத்தியல்லவோ இவர் எடுத்துக்கொண்ட விஷயத்தை ஸ்தாபிக்கவேண்டும். அப்படிக்கின்றி அவை வைதிக பாசுபதோபநிடதத்துள்ளனவெனக் கூறிவிட்டால் அதுமட்டே சித்தாந்தமாக அவற்றைக் கொள்ளப்போதுமோ? வெகுநன்று! யாம் மேற்காட்டிய உபமானங்கள் எல்லாம் முண்டகம், கடம், சாந்தோக்கியம் முதலிய வுபநிடதங்களில் உள்ளவை யாதலால் இவர் சுவீகார பாஷ்யகாரராதி பெரியோர் கையாடிய அவ்வுபநிடதங்களை அப்பிரமாணமெனமொழிய இவரா வலியுற்றவர்? அப்படியிருக்க, ஏதும் ஆலோசிக்காது தோன்றியபடி எல்லாம் எழுதிவிட்டால் ஏதோ பிறாஞ்சிடு

விரர் என இவர்க்குறியது மனப்பாலேயாம். 'மேலும் அத்துவிதிகள் சித்தாந்தப்படி எல்லா திருஷ்டாந்தங்களும் ஒவ்வொரு நிலைமையில் ஒவ்வொரு அதிகாரத்திற்கேற்ப ஒவ்வொருவிதம் கூறப்பட்டனவென சர்வ சமரஸ சித்தாந்தமமையுமாக, அதைவிட்டு இது தப்பு, அது தவறு, எமக்கு வேண்டியதே அநுகிவசனம், மற்றவையெல்லாம் பிரக்ஷிப்தம்' என்று வாதிப்பது முறை சாஸ்திரங்களைப் படித்தவர்வழியேயல்ல; பிரமாணங்களிற் கட்டுண்டு வேதாந்தங்களை மீமாஞ்சா நியாயவலிகொண்டும், வேதோபப்ருங்கணங்களைக்கொண்டும், ஆறு அங்கங்களைக்கொண்டும், முதறிஞர்வழி பிறழாது பொருட்படுத்தாது புதுவழிகொண்டு திண்டாடுவதுமன்றி அவ்வழிசெல்லாது பழயமார்க்கத்தை யனுசரிப்பவரைப் பழிப்பதுமானால் வெருவாய் இவர் கொள்ளும் சித்தாந்தம் விவேகிகள் ஒப்ப நேருமல்லவா? அவர் என்செய்வார். வேதாந்திகள் கட்டிய வைரக்கோட்டையைப் பெயர்க்கமுடியாமற்போனால் 'இங்கிலீஷ் சாஸ்திரப்படி வைரம் என்பாம். அதைத்தொடுதலும் எமக்கு அநர்கமாம்' எனத்துவஷத்திவேததானே நியாயம். நிலைக. உபசங்கார வைபவத்தைக் கவனிப்பாம். சுருதியுக்த வுபமானங்களை இவர் குரங்கின்கைப் பூமாலைபோல கெடுப்பதாய்ச் சொல்லுகிருர். இவரிடம் சுருதிகள்படும் பாட்டிற்கு ஆரியனுர் செய்தது குற்றமென்று சொல்லவேண்டுவதுதானே. பாருங்கள்

(க) விஜேஷ தூலூரூ தாவெஜெஷா ரோசயம் வூக வெஷிதி | உதிஹா ஸபுராணாஹுாம்வெஷா நஜூஷெவ வஜூஹயெசு॥

(உ) வெஷாவெஜூாயஸயஜாத ஸதூாஜா நம்ஸ வெஷடி | ஜஷிஹிஜி ப்ஸுஷிவெதவ்வெஜூகாபம் காஷ்ரா நஜஹாதநாடி॥

(க) சிறிதுபடிந்துக் கற்றவனுக நினைத்துக்கொள்ளும் மக்களிடம் வேதங்கள் 'ஐயோ எம்மை இவன் திநெறி செலுத்துவன்' என வச்சமுறுகின்றனவாகவே, இதிஹாசபுராணங்களைக் கொண்டே வேதங்களைப் பொருட்படுத்த வேணடுமே.

(உ) 'வேதார்த்தங்களைத் தமது மேதைகொண்டறிந்தால் அதிற்றமொற்றமும் சம்பவிக்கும். ஆகையால் மகரிஷிகள் துணிந்தோதிய பொருட்களில் மதியுள்ளார் மயங்குவாரில்லை' என்று அநேக ஸ்மிருதிபுராணங்கள் கூறியவாறு முக்கிய வேதார்த்தங்களை உபபிருங்கண நியாயங்களைக் கொண்டே நிச்சயிக்கவேண்டியிருக்க ஐயோ பாவம்! ஆங்கிலேயசட்ட வுபமானத்தால் அதைத்துலைத்து விபரீதவிபாகம்செய்து நல்ல நவீன பாசுபதம் கண்டார். முதலில் அனுரியர் புகழ் இந்நூலுக்குக்காப்புப் பூர்த்தியில் ஆரியநிந்தை. இதற்கு மங்களம்; இடையே வேதவைதிக வதாந்தி நிந்தைகள் மத்யமங்களங்கள் என கவினுஞ் சிறப்பிலநூக் கிலக்கியமில்லாதுபோக அதற்கு முக்யவிஷயமே இந்நூலேயாம் மென்க. பாசுபதாஸ்திரத்தை யவனி தேவர் நிர்மித்தகாலத்தில் அக்கினி யடிப்புறமும் விஷ்ணு நடுப்புறமும் ஸோமன் முனைப்புறத்து மமைக்கப்பட்டான். இவர் அதை அனுரியவசரரிடம் உபயோகிக்கவேண்டி [illegible] தெரிந்து ஆரியரிடம் விநியோகிக்கவேண்டி மாற்றி

ப்பிடித்தார்போலும்! அத்தொற்றான் இவர் பாசுபதம் துவக்கத்தில் சௌம்யவர்த்தைகள்போற்றுன்றி இறுதியிற் தீப்பொறிகக்கி கிற்பதாயிற்று. மேலும் இவர் இவ்வஸ்திரத்தைச் சிறப்பிக்கவமைத்த ஆங்கிலேயதத்துவ பீஜாக்ஷரங்கள் அன்று பாசுபதத்தின் நடுவே அமைந்த நாரணனை இன்று இவர் கொண்டாடிய தலை கீழ்புரண்ட வைதிக பாசுபதத்தில் ஒன்பதாமவதாரங் கொண்டருளச் செய்தன. ஆதலாற்றான் அவை பௌத்தவாதங்களாயின. ஆன்மசதஸத்வாதத்தை இவர் சுவீகாரபாஷ்யகாரராகிய ஸ்ரீகண்டராதியோரும் ஜைனவாதமே என்று பாசுபதாதிகரணத்தின் பூர்வாதிகரணத்தே மறுத்தொழித்திட்டார். ஆகையால் அவ்வாதம்கொண்ட கோலத்துடன் பவனிவந்த கலியுக நவீன தாந்திரிக மகாரௌரவ ரகஸிய சித்தாந்திகள் எடுத்த ஷை வாதம் ஸ்ரீ நாராயணமூர்த்தியின் ஒன்பதாமவதார வாதமேயாம். இவ்விதம் அடியில் ஆங்கிலேயவாதம் இடையே ஜைனவாதம், முடிவில் பௌத்தவாதம். இவைகளை தமது விபரீத வைதிக பாசுபதாஸ்திரத்துக் கனிகலமாக்கினுர். இதுமட்டோ! ஏதோ ஆந்தையும் குரங்கும் ஒருவரையொருவர் புகழ்ந்து மகிழ்ந்தவாறு இவ்வளவழகிய வைதிகநூல் நாத்த இந்த வறிஞரைப் பரமாசாரியராகக் கொண்டு மிதமிஞ்சிப்புகழ்ந்து வீரகண்டாமணியையும் ஆட்டினுரொருவர். ஆளில்லா ஊரில் அசுவமேதம் செய்வது அசாத்யந்தானே. தமிழ்நாட்டின்வாடை சிறிதுமில்லாத விடமிருந்து ஏதோ வடநூல்வாடையுமற்ற சில பேரவிச்சைவர் கூட்டத்தில் தாம்பெற்ற வெற்றிக்கொடியே போதுமென்று தம்முட் டாம் களித்ததற்கும் அவ்விஷயத்தில் இதர பலநூல்களில் அநேக சாஸ்திரீய நியாயதண்டங்கொண்டு இவர் வாதம் வெளிவராவண்ணம் எவ்வளவு புடைத்தாலும் பொறுமையுடன் அவைகளை லக்ஷியஞ்செய்யாது எதும் பதிலளிக்காது தான்சொன்னதையே பன்னிப்பன்னி பன்முறை எழுதி எட்டைக்கெடுத்து நாட்டை நாசமாக்கும் விடாமுயற்சிக்கும்இவர் எவ்வளவு விபரீதவழிசென்றாலும், அந்நாட்களில் துரியோதனன் கக்ஷியிற்சேர்ந்த கர்ணுகியைப்போல இவர்வழி கொண்டாடு மிக்காலத்துப் புதிய சித்தாந்திவருணுவரர் சுவாமிபக்தி குருபக்திக்கும் யாம் எவ்வளவோ நன்றி கூறவேண்டும். 'கெட்டாலும் ஜாதிமுறையுடன் கெட்டான்' என்ற பழமொழிக்கேற்றபடி இவர் நவீனவைதிகவாதத்திலிறங்கினும் வாயால்மட்டில் வைதிகரெனவும் வைதிகசம்பந்தம்வேண்டுமெனவும் இக்காலத்துத் தென்னுட்டுச் சிவசித்தாந்திகளைப்போல இவரும் கருதுவாருள் ஒருவரே. இவர் கையிலெடுத்தும் கண்டத்திலமைத்தும் கொண்ட இப்பாசுபதாஸ்திரம் (சிவசிருஷ்டமான சக்கிரம் பசுபதியால் சிருஷ்டிக்கப்பட்டமையால் பாசுபதாஸ்திரமெனக் காரணப்பெயரால் வழங்கப்பட்டது) ஜலந்தரன் கையஸ்திரமாய் இவர் கொள்கைக்கு மாருய் விபரீதமாகி இவரை வைதிகநெறி செல்லவிட்டாது தடுத்து ரௌரவநெறியே (ரௌரவாகமம் சொல்லிய சுத்ததாந்திரிக நெறியே) செல்லச்செய்ததறிந்து தமது விபரீதபாசுபதாஸ்திரநூலை மீண்டும் தாமேபார்த்துண்மையறிந்தடங்கி வேதவைதிக வேதாந்திநிந்தை மகாபாபத்துக்காளாக்கி பைரவகுலயாதனைக் கிலக்காகாவண்ணம் பரமேசுப்பிரசாத பாத்திரராகும்படி வேதவைதிக வேதாந்த விசுவாசத்தை இனியாவது அந்நாட்களில் பௌத்தம் விடுத்துச் சைவம் தழைக்கச் சிலவிரதம் கொண்டெழுந்த ஆழ்வாராஜப் பெருமானைப்போலாவாரென நம்பி அடியிற்குறாது அவருக்கு ஹிதோபதேசத்தை இந்நூலின் இறுதியில் மங்களமாக்குவாம்.

இன்னும் வரும்.